# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 121/பேரூ/2022**

**நாள் : 7.10.2022**

திரு. S. மதியழகன்,
ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம். ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
ஆட்டையாம்பட்டி பேரூராட்சி, சேலம் மாவட்டம். ... எதிர்மனுதாரர்

சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.10, தேவராயன் வீதி, ஆட்டையாம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. மதியழகன் என்பவரின் 21.07.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.08.2022ல் பெறப்பட்டு, 121/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட எண்.10, தேவராயன் வீதி, ஆட்டையாம்பட்டி என்ற முகவரியைச் சேர்ந்த திரு. S. மதியழகன் தமது 21.07.2022 நாளிட்ட புகார் மனுவில், தான் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. குணாளன் அவர்களுக்கு குறைதீர் விண்ணப்பம் அனுப்பியிருந்ததாகவும், அதன் மீது செயல் அலுவலர் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எனவே அவர் மீது துறைசார் ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட உத்தரவிடுமாறும், தனது குறைதீர் மனுவில் குறிப்பிட்டுள்ள குறையை தீர்த்து வைக்குமாறும் கோரியுள்ளார். மனுதாரர் 10.06.2022 நாளிட்டு ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பியுள்ள விண்ணபத்தில் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி 6–வது வார்டு வீரப்பன் வீதியில் (புளியமரம் அருகில்) அமைந்துள்ள பொதுக் கழிவறை தோராயமாக கடந்த 6 வருடங்களுக்கு மேலாக எவ்வித பராமரிப்புமின்றி, பயனற்று கிடக்கிறது என்றும், அதன் அருகில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எவ்வித பயன்பாடுமின்றி கட்டிய நிலையிலேயே உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார். எனவே, மேற்கண்ட பொது கழிவறையை முறையாக பராமரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், தண்ணீர் வசதி செய்துதர நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், செப்டிக் டேங்க் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும், துண்டிக்கப்பட்ட மின்னினைப்பினை மீண்டும் இணைத்து கழிவறையை மறு பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டுள்ளார். இதனால் காமராஜர் வீதி, வீரப்பன் வீதி,

தேவராயன் வீதி, பெரியார் வீதியில் வசிக்கும் பெண்களுக்கு இக்கழிவறை மிகவும் பயன்படுமென்றும், எனவே, கழிவறையை விரைவில் மறு சீரமைப்பு செய்து பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார். மனுதாரர் தனது புகார் மனு குறித்து ஆதார ஆவணங்களையும், கழிப்பறை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆகியவற்றின் புகைப்பட ஆதாரங்களையும் தனது புகார் மனுவுடன் இணைத்துள்ளார்.

2. மனுதாரரது புகார் மனுவின் மீது ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை கோரப்பட்டது. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அனுப்பிவைத்துள்ள 18.8.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் ஆட்டையாம்பட்டி பேரூராட்சியின் தற்போதைய 2–வது வார்டு (பழைய 6–வது வார்டு) புளியமரம் அருகில் அமைந்துள்ள கழிவறை 20 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதென்றும், ஆழ்குழாய் கிணற்றில் தண்ணீர் வற்றியதாலும், நிலத்தடி நீர்மட்டம் இல்லாத காரணத்தினாலும் ஆழ்குழாய் கிணறு அமைக்க இயலாமல் போய்விட்டது என்றும், இதனைக் கருத்திற்கொண்டு அருகிலுள்ள முனியப்பன் கோவில் வீதியில் (அரை கிலோ மீட்டர் அருகில்) ஒரு கழிப்பிடம் 2009–2010ஆம் ஆண்டு கட்டப்பட்டு தற்போதும் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றும், மேலும் தற்போது காமராஜர் வீதி, காளியம்மன் கோவில் வீதியில் (மளிகைக் கடை வீதி) புதிய கழிப்பிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும், இக்கழிப்பிடம் கட்டப்படும்பொழுது அப்பகுதி மக்கள் அனைவருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்கண்ட பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்துவந்த நிலையில், நிலத்தடி நீர்மட்டம் வற்றிவிட்ட காரணத்தினால் பயனற்று போய்விட்டதாகவும், தற்போது ரூ.652.84 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் புதிய நீர்த்தேக்கத் தொட்டி வேலைநடைபெற்று வருவதாகவும், பணிகள் முடிவுற்ற பின்னர் மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலும் தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்ய நடவடிக்கையில் உள்ளதாகவும், இப்பணிகள் யாவும் 2022 டிசம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு கட்டி முடிக்கப்பட்ட புதிய நீர்த்தேக்கத் தொட்டியில் தண்ணீர் ஏற்றும்போது அதன் அருகிலுள்ள கழிப்பிடத்திற்கு அதே மேல்நிலைத் தொட்டியிலிருந்து பயன்பாட்டிற்கு தண்ணீர் எடுத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

3. மனுதாரரின் புகார் மனு மீதான நேரடி விசாரணை 27.09.2022 அன்று மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோருக்கு 19.9.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பிவைக்கப்பட்டன. மனுதாரர் திரு. சு. மதியழகன் 27.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "ஆட்டையாம்பட்டி பேரூராட்சி 6–வது வார்டு வீரப்பன் வீதியில் உள்ள பொதுக் கழிப்பறை கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித பராமரிப்புமின்றி தண்ணீர் வசதி இல்லாமலும், மின்னிணைப்பு வசதி இன்றியும் மிகவும் பயனற்ற நிலையில் உள்ளது. அதே போன்று அங்கு அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் எவ்வித பயன்பாடுமின்றி கட்டிய நிலையிலேயே உள்ளது. எனவே, வார்டு எண்.6ல் உள்ள காமராஜர் வீதி, வீரப்பன் வீதி, தேவராயன் வீதி மற்றும் பெரியார் வீதியில் வசிக்கும் மக்கள் பயன்படுத்தும் வகையில் மேற்கண்ட பொது கழிப்பறைக்கு மின்னிணைப்பு கொடுத்திடவும், அங்குள்ள செப்டிக் டாங்கினை சுத்தம் செய்து, தண்ணீர் வசதியுடன் மறுசீரமைப்பு செய்து கழிப்பறையை பொதுமக்கள் உபயோகப்படுத்திடவும், அங்குள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் மூலம் பொதுமக்கள் போதுமான குடிநீர் வசதி பெற்றிடவும் தேவையான நடவடிக்கையினை பேரூராட்சி நிர்வாகம் எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் திரு. இரா. குணாளன் 27.09.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆட்டையாம்பட்டி பேரூராட்சி 6வது வார்டிலுள்ள ஆழ்குழாய் கிணற்றில் நீர் வற்றிவிட்டதால், மேற்கண்ட கழிப்பறையை தண்ணீர் வசதியின்றி பயன்படுத்திட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அங்கிருந்த கழிப்பறை கதவு மற்றும் மின்சாதனப் பொருட்கள் சமூக விரோதிகளால் களவாடப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பறையை பேரூராட்சியின் பொது நிதியின் மூலம் விரைவில் சீரமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் அங்குள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி நிலத்தடி நீர்மட்டம் குறைந்த காரணத்தினால் தொட்டி பயன்படாத நிலையிலுள்ளது. தற்பொழுது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் குடிநீர் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிவுற்று மற்ற பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட பணிகள் அனைத்தும் டிசம்பர் 2022ல் முடிவடைந்த பின், மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்துவிடும் என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பாக இம்முறைமன்றத்திற்கு என்னால் அளிக்கப்பட்டுள்ள 23.9.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல்வாக்குமூலமாக பதிவுசெய்து கொள்ளும்படியும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

5. ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது 23.9.2022 நாளிட்ட கடிதத்தில் தனது முந்தைய 18.8.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்திருந்த விளக்கத்தினையே மீள தெரிவித்துள்ளதுடன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் பேரூராட்சியின் அனைத்து பகுதிகளிலும் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன என்றும், பணிகள் முடிவுற்றவுடன் கழிப்பறைக்கு தண்ணீர் வழங்கப்பட்டும், மின்னிணைப்பு பெற்று மீள பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று தெரிவித்துள்ளார். மேலும் அருகிலுள்ள முனியப்பன் கோவில் வீதியில் (அரை கிலோ மீட்டர் அருகில்) ஒரு கழிப்பிடம் 2009–2010ஆம் ஆண்டில் கட்டப்பட்டு தற்போதும் பயன்பாட்டில் உள்ளதென்றும், மேலும் தற்போது அருகிலுள்ள காமராஜர் வீதி, காளியம்மன் கோவில் வீதி (மளிகை கடை வீதி) கழிப்பிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 12.09.2022 அன்று பணிகளை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும், இக்கழிப்பிடம் அமைக்கும் பணி முடிவடைந்தவுடன் இப்பகுதி மக்கள் அனைவரும் பயன்படுத்தும் விதத்தில் கொண்டுவரப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படம், அவரது வாக்குமூலம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது விளக்க அறிக்கை, வாக்குமூலம், வாக்குமூலத்துடன் அளிக்கப்பட்ட 23.09.2022 நாளிட்ட கூடுதல் அறிக்கை மற்றும் ஆவணங்கள், புகைப்படங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- மனுதாரர் இம்முறைமன்றத்தில் அளித்துள்ள புகார் மனுவில், தான் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு குறைதீர் விண்ணப்பம் அனுப்பியிருந்ததாகவும், அதன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், அவர் மீது துறைசார் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறும், தனது குறைதீர் மனுவில் உள்ள குறையை தீர்த்து வைக்குமாறும் கோரியுள்ளார்.
- மனுதாரர் ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு 10.6.2022 நாளிட்ட குறைதீர் விண்ணப்பத்தினைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவத்திற்கு 21.7.2022 நாளிட்ட புகார் மனுவினை அளித்துள்ளார்.

- ஆட்டையாம்பட்டி பேரூராட்சி 6வது வார்டு வீரப்பன் வீதியில் (புளியமரம் அருகில்) அமைந்துள்ள பொது கழிவறை, கடந்த 6 வருடங்களுக்கு மேலாக பராமரிப்பின்றி பயனற்று உள்ளதையும், அதன் அருகில் அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி எவ்வித பயன்பாடுமின்றி கட்டிய நிலையிலேயே உள்ளதையும், மேற்கண்ட கழிவறையை மறு பயன்பாட்டிற்கு கொண்டுவரவும், துண்டிக்கப்பட்டுள்ள மின்னிணைப்பினை மீண்டும் பெற்றும், அங்குள்ள செப்டிக் டேங்கினை சுத்தம் செய்திடவும் மனுதாரரால் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.
- கடந்த ஆறு ஆண்டுகளாக பயனற்றுக் கிடந்த கழிப்பறையை ஒரே மாதத்திலோ அல்லது மனுதாரர் தான் எதிர்பார்க்கும் விதத்திலோ பணிகளை செப்பனிட பேரூராட்சியால் இயலாதது மட்டுமல்லாது, முறையான அனுமதி, தொகை ஒப்பளிப்பு போன்றவைகளுக்கு துறைத் தலைமை மற்றும் உயர் அதிகாரிகளை செயல் அலுவலர் அணுகி உரிய ஒப்புதல் பெற்ற பின்னரே உரிய பணிகளுக்கு ஒப்புதல் அளித்து, பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதால், நடைமுறையிலுள்ள விதிகளின்படியே பேரூராட்சியின் செயல் அலுவலர் செயலாற்றிட முடியும் என்பதையும், அதற்கான கால அவகாசம், நிர்வாக ரீதியிலான நடைமுறைகள் இவற்றை தொடர்ந்தே, உரிய பதிலறிக்கையினையும் மனுதாரர்களுக்கு வழங்கிடவும் முடியும்.
- மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள ஆட்டையாம்பட்டி பேரூராட்சி 6வது வார்டிலுள்ள ஆழ்குழாய் கிணற்றில் நீர் வற்றிவிட்டதால், மேற்கண்ட கழிப்பறை தண்ணீர் வசதியின்றி பயன்படுத்திட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், அங்கிருந்த கழிப்பறை கதவு மற்றும் மின்சாதனப் பொருட்கள் சமூக விரோதிகளால் களவாடப்பட்டுள்ளது. மேற்கண்ட கழிப்பறையை பேரூராட்சியின் பொது நிதியின் மூலம் விரைவில் சீரமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று ஆட்டையாம்பட்டி பேரூரரட்சி செயல் அலுவலர் வாக்குமூலம் அளித்துள்ளார்.
- மேலும் மேற்கண்ட பகுதியில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்துவந்த நிலையில், நிலத்தடி நீர்மட்டம் வற்றிவிட்ட காரணத்தினால் பயனற்று போய்விட்டதாகவும், தற்போது ரூ.652.84 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் புதிதாக குழாய்கள் பதிக்கும் பணி நடைபெற்று வருவதாகவும், பணிகள் முடிவுற்ற பின்னர் மேற்கண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலும் தண்ணீர் ஏற்றி விநியோகம் செய்ய நடவடிக்கையில் உள்ளதாகவும், இப்பணிகள் யாவும் 2022 டிசம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாரியத்தினால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு தண்ணீர் ஏற்றும்போது அதன் அருகிலுள்ள கழிப்பிடத்திற்கு அதே மேல்நிலைத் தொட்டியிலிருந்து பயன்பாட்டிற்கு தண்ணீர் எடுத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.
- ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரது மேற்கண்ட வாக்குமூலம் மற்றும் அறிக்கையின்படி மனுதாரரால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும், விரைவில் பணிகள் முடிவுற்றவுடன் பொதுக் கழிப்பறை மறு பயன்பாட்டிற்கு வரும் என்பதும், அருகிலுள்ள நீர்த்தேக்கத் தொட்டிக்கும் நீர் ஏற்றப்பட்டு பொது மக்களின் பயன்பாட்டிற்கு தண்ணீர் வழங்கப்படவும் உள்ளது தெளிவாக்கப்பட்டுள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட தற்போதைய 2வது வார்டு (பழைய 6வது வார்டு) (புளியமரம் அருகில்) அமைந்துள்ள பொதுக் கழிப்பறை அதன் அருகிலிருந்து ஆழ்குழாய் கிணற்றில் நீர் வற்றியதன் காரணமாக பயனற்று இருந்த நிலையில், தற்போது அருகிலுள்ள காமராஜர் வீதி, காளியம்மன் கோவில் வீதியில் (மளிகை கடைவீதி) கழிப்பிடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகளை

மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதும் மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் அனைத்து வார்டுகளிலும் குழாய்கள் பதிக்கும் பணிகள் முடிக்கப்பட்டு, மற்ற பணிகள் டிசம்பர் 2022க்குள் முடிவடைந்தவுடன், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வந்துவிடும் என்று ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளதால், மனுதாரரின் கோரிக்கை நிறைவேற்றப் பட்டுள்ளதாக கருதி, இப்புகார் மனுவின் மீதான நடவடிக்கைகளை இத்துடன் முடித்துவைக்கலாமென்று இம்முறைமன்ற நடுவம் கருதி, அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும் 2022 நவம்பரில் அனைத்துப் பணிகளும் முடிவுற்றவுடன் காலதாமதமின்றி மக்களின் அடிப்படைத்தேவையான கழிப்பறையை மூன்று மாதங்களில் மறுபயன்பாட்டிற்குக் கொண்டுவர துரித நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு ஆட்டையாம்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 7-ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. சு. மதியழகன்,
   10, தேவராயன் வீதி, ஆட்டையாம்பட்டி,
   சேலம் மாவட்டம்–637 501.
2. செயல் அலுவலர்,
   ஆட்டையாம்பட்டி பேரூராட்சி,
   ஆட்டையாம்பட்டி, சேலம் மாவட்டம்–637 501.
3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
   சேலம் மண்டலம், சேலம்.
4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
   பேரூராட்சிகளின் ஆணையரகம்,
   நகர் நிர்வாக அலுவலகம்,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர்,
   சென்னை–28.
5. இணை இயக்குநர் (பொது) மற்றும்
   ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
   பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
   நகர் நிர்வாக அலுவலகம்,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

10/10/22

செயலாளர்.

உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை 600 032